**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**OS No. 27/2015**

**17.03.2026 வா.சா.1 ரவிச்சந்திரன் த/பெ ராமசாமி**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

செங்கத்தை சேர்ந்த பெருமாள் என்பவர் அவர் பெயரில் ஒரு ஓட்டல் வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த ஓட்டலில் பெருமாள் வாரிசுகள் அனைவரும் வேலை செய்திருந்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பெருமாளுக்கு அந்த ஓட்டலை சுற்றி எவ்வளவு இடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. அவர் இடத்தை சென்னையில் உள்ள கலைமகள் சபாவுக்கு கிரையம் கொடுக்க முயற்சி செய்தார் என்றால் சரிதான். கலைமகள் சபாவுக்கு யார் யார் விற்கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கலைமகள் சபாவுக்கு அந்த இடத்தை ரூபாய் 55 லட்சத்திற்கு விலை பேசினார்கள் என்று அவர்கள் கூறி எனக்கு தெரியவந்தது. அதில் முன்பணமாக எத்ததை லட்சம் பெற்றார்கள் என்றால் 32 லட்சம் பெற்றதாக சொன்னார்கள். அதற்காக கலைமகள் சபா பணத்தை திருப்பி கொடுக்க செங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள் என்றால் தெரியாது. அது திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தில் அ.வ 122/2000 என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு நடந்த விவரமும் எத்தனை ஆண்டுகள் நடந்தது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த வழக்கு திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது அ.வ 48/2004 என மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பார்ட்டியாக சேர்க்கப்பட்டதால் தெரியும். அந்த வழக்கில் நானாகவே ஒரு தரப்பினராக சேர்ந்தேனா அல்லது மற்ற வழக்காளிகள் சேர்த்தார்களா என்றால் அதைப்பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. எதற்காக அந்த வழக்கில் என்னை சேர்த்தார்கள் என்றால் அந்த சொத்தை நான் வாங்கியதால் ஒரு தரப்பினராக சேர்த்தார்கள். எந்த தேதியில் யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு கிரையம்

வாங்கினேன் என்றால் ரூ.27 லட்சத்திற்கு 2002 ல் பெருமாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். தேதி ஞாபகமில்லை. நான் பெருமாளிடம் கிரையம் பெற்ற போது அந்த வழக்கு நிலுவையில்தான் இருந்தது. நிலுவையில் உள்ள சொத்தை வாங்கலாமா என யாரிடமாவது ஆலோசனை பெற்றேனா என்றால் இல்லை. அநத் வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று தெரிந்தே நான் பெருமாள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரயம் பெற்றது சட்டப்படி செல்லாது என்றால் வழக்கறிஞர் ஆலோசனைப்படி அந்த நேரத்தில் பதிவு செய்தேன். வழக்கறிஞர் ஆலோசனை பெற்றிருந்தேன் அது நிலுவையில் உள்ள வழக்கு சம்மந்தப்பட்ட சொத்து என்று அதை வாங்க வேண்டாம் என சொல்லியிருப்பார் என்றால் வாங்கசொல்லிதான் வழக்கறிஞர் சொன்னார். அதனால்தான் நிலுவையில் உள்ள வழக்கில் நானாகவே சேர்ந்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் மொத்தம் ரூ. 55 லட்சத்திற்கு கிரையம் பெற்றேன். நான்கு கிரைய பத்திரங்கள் மூலம் கிரயம் பெற்றேன். அந்த 4 கிரய பத்திரங்களும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. மேற்படி தொகையை பெருமாள் மற்றும் அவர்களின் மகன்களிடம் கொடுத்தேன். பெருமாளின் 3 மகள்களுக்கு இந்த கிரையத்தை பற்றி தெரியும் அவர்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள். பெருமாளின் 3 மகள்களில் ராணி என்பவர் மேற்படி வழக்கு சொத்து சம்மந்தமாக செங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதைப்பற்றி தெரியாது. அந்த வழக்கை தந்தை பெருமாள் மீது தாக்கல் செய்தார் என்றால் அதை பற்றி தெரியாது. கலைமகள் சபாவுக்கு ரூ. 56 லட்சத்திற்கு விலை பேசிய நிலையில் நான் ஏன் 55 லட்சத்திற்கு கிரயம் வாங்கினேன் என்று சொன்னால் அப்போது பேசப்பட்டதற்கு இணங்க முடிவு செய்தோம். நான் எந்த தொயையும் பெருமாளுக்கு அவர் மகன்களுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் வாங்கிகொண்டுதான் கிரயம் செய்தார்கள். கலை மகள் சபாவிடம் பணத்தை நாங்கள்தான் திரும்ப கொடுத்தோம். 25.03.2008 ல் வரைவு

காசோலை மூலம் கொடுத்தோம். அந்த காசோலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அ,.வ 48/2004 ல் தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்று ஞாபகமில்லை. பெருமாள் மற்றும் அவருடைய மகன்களுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது உண்மையா அல்லது கலைமகள் சபாவுக்கு வரைவு காசோலை மூலம் செலுத்தியது உண்மையா என கேட்டால் இரண்டும் உண்மைதான். அந்த பத்திரத்தை சுமார் 6 ஆண்டுகள் பதிவு செய்யாமல் வைத்திருந்தார்கள். தாவா சொத்தின் மொத்த பரப்பு 28 ½ சென்ட். அதன் நான்கு பக்க அளவுகள் தெரியுமா என்றால் தெரியும். அதன் எல்லைகள் வடக்கில் பஸ்நிலையம், கிழக்கில் கிருஷ்ணகிரி திருவண்ணாமலை மெயின் ரோடு, தெற்கு பகுதியில் வஜ்ஜிரவேல் கட்டிடம், மேற்கு விநாயக மூர்த்தி வகையறா இடம். நான் வரைவு காசோலை மூலம் கொடுத்த தொகை ரூ. 55,10,250/-. வட்டியை சேர்த்து மேற்படி தொகையை கட்டினேன். கலைமகள் சபாவுக்கு பணம் செலுத்த வேண்டியது பெருமாள் மற்றும் அவரின் பிள்ளைகள்தான் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தப்பட்ட வழக்குகள் எல்லாம் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அனைத்து வழக்குகளும் முடிந்துவிட்டது. ராணி தாக்கல் செய்த அசல் வழக்கு 160/2006 வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ராணிக்கு அவர் தகப்பனார் தானசெட்டில்மென்ட் எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவாவில் அதைப்பற்றி சொல்லவில்லை. தாவா சொத்து எத்தனை அயிட்டமாக பிரித்துள்ளேன் என்றால் நான்கு பத்திரங்களில் வாங்கினோம், அளவு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு 1ம் பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் பேசியபடி பணம் கொடுத்திருந்தால் புகார் கொடுத்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. ராணி பெயர் உட்பட தாவா சொத்துக்கு உட்பட்ட பட்டாவை நான் பார்த்ததில்லை. புகார் சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள். குற்ற எண். 4/2015 பிரிவுகள் 420, 506(1) இதச பிரிவுகள் கீழ் வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள் என்றால் ஆய்வாளர் முழு விசாரணை நடத்தி வழக்கை முடித்து வைத்தார். அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் தாவா சொத்தை கிரயம் பெற்றதே செல்லாது என்பதால் வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(பிரதிவாதி 1 , 2 தரப்பு வழக்கறிஞர் மேலும் குறுக்கு விசாரணை செய்ய ஆவணம் தேவைப்படுவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.